# உபயோகித்த பாதணிகளைத் திருடிய தென்கொரியர்

உபயோகித்த 1,200 சோடி விலையுயர்ந்த பாதணிகளை திருடிய தென்கொரியர் ஒருவரை காவல்துறையினர் கைது செய்துள் ளனர். மரண வீடுகளிற்கு அனுதாபம் தெரிவிப்பவர் போலச் செல்லும் பார்க் தனது பழைய பாதணிகளை அங்கேயே கழற்றிவிட்டு விலையுயர்ந்த பாதணிகளை அணிந்துகொண்டு வந்து விடுவார். மரணவீட்டிற்குச் செல்லும் தென் கொரியர்கள் மரியாதையின் நிமித்தம் உடல் வைத்திருக்கும் இடத்திற்கு சற்று வெளியே தமது பாதணிகளைக் கழற்றிவிட்டுச் செல்லும் பழக்கமுடையவர்கள் என்பதோடு, வீட்டிற்கு வெளியே உபயோ கிக்கும் பாதணிகளை வீட்டிற்குள் அணிந்து வரமாட்டார்கள். இவ்வாறு திருடிய பாதணிகளை தனது பழைய பொருட்கள் விற்கும் கடையில் விற்று வந்தார். வழமைபோலவே இவர் தனது கைவரிசையைக் காட்ட முற்பட்டபோது கையும் களவுமாக பிடிக்கப்பட்டு காவல்துறையினரிடம் ஒப்படைக்கப்பட்டார். இவரது சேமிப்பு இடங்களை தீடீர் சோதனையிட்டபோது 1200 சோடி பாதணிகள் அளவின் அடிப்படையில் நேர்த்தியாக அடுக்கப்பட்டு விற்பனைக்குத் தயாரான நிலையில் இருந்ததைக் கண்டு ஆச்சரியமடைந்தனர். இப்பாதணிகளை மக்களின் பார்வைக்காக தமது காவல் நிலையத்தில் வைத்தபோது பெரும்பாலான



பாதணிகள் உரிமையாளர்களால் மீளப்பெறப்பட்டுள்ளன. 59 வயது பார்க்கின் அடுத்த திட்டம் என்னவாகும். என்பதே சேயுள் நகர வாசிகளின் கேள்வி?

# வெற்றிப் பதக்கத்தினைக் கடித்ததால் பல் உடைந்தது



தற்போது கனடாவின், வன்கூவரில் நடைபெற்றுவரும் 21வது குளிர்கால ஒலிம்பிக் போட்டியில் வெற்றிப்பதக்கம் பெற்ற டேவிட் மொலர் படப்பிடிப்பாளர்களின் வேண்டுதலிற்கு இணங்க பதக்கத்தைக் கடிப்பது போல பாவனை செய்யுமாறு கூற உணர்ச்சி வசப்பட்டநிலையில் உண்மையாகவே கடிக்க முயல முற்பல்லின் ஒருபகுதி உடைந்துவிட்டது. லூக் விளையாட்டில் இரண்டாவது இடத்தினைப் பெற்ற 28 வயது ஜேர்மனியரிற்கே இந்நிலை ஏற்பட்டுள்ளது. முதலாவது இடத்தினைப் பெற்ற இவரது சக நாட்டவரான பெலிக்ஸ் லோச் இவ்விடயத்தில் அறிவு பூர்வமாக நடந்து கொண்டதனால் எதுவும் ஏற்படவில்லை. முன் பல்லில் உடைவு ஏற்பட்டுள்ளதால் வழமைபோல புன்னகை செய்ய முடியாத நிலையில் மொலர் உள்ளார். வெள்ளிப்பதக்கம் பெற்ற இவர் இயற்கையாக படப்பிடிப்பாளர்கள் முன் தோன்ற முடியாது இருப்பது, இப்பதக்கத்தின் நினைவுகளை மீட்டிப்பார்க்கும்போதெல்லாம் தனது உணர்ச்சி உந்துதலின் விளைவை எதிர்காலத்திலும் நினைவுபடுத்தப்போகின்றது என்ற கவலையும் இவருக்குண்டு. உணர்ச்சிகளையும், உண்மைகளையும் உரிய முறையில் உள்வாங்காவிட்டால் ஏற்படும் விளைவுகள் காலத்தால் அழியாதவையாகிவிடும்.

# எறும்பின் படத்திற்குப் பரிசு

பலதும் பத்தும்

- விநோதன் -




எறும்பு ஒன்று ஆமைப்பூட்டினை இழுத்துச் செல்கையில் எடுக்கப்பட்ட நிழல் படத்திற்கு 700 பவுண்ஸ் பரிசளிக்கப்பட்டுள்ளது. நிழற்பட போட்டி ஒன்றிலேயே முதலாவது பரிசு இப்புகைப்படத்திற்கு வழங்கப்பட்டது. தனது எடையிலும் பார்க்க நூறு மடங்கு எடைகொண்ட ஆமைப்பூட்டு ஒன்றினை வழுக்கும் தளம் ஒன்றில் தலைகீழான நிலையில் இழுத்துச் செல்கையிலேயே, கேம்றிட்ஜ் பல்கலைக்கழக விலங்கியல் நிபுணர் வைத்தியர் தொமஸ் என்டிலின் அவர்களால் எடுக்கப்பட்டது. ஒட்டிக் கொள்ளும் தன்மை கொண்ட சிறிய ஐந்துக்களின் கால்கள் பற்றிய ஆராய்ச்சியில் இவர் ஈடுபட்டுள்ளார். பிரமிப்பூட்டத்தக்க வகையில் 500 மில்லிகிராம் எடைகொண்ட ஆமைப்பூட்டினை தனது வாயினால் கவ்வியவாறு பின்னோக்கி ஏறியதே வியப்பாக நோக்கப்படுகின்றது.

எறும்பின் கால்களிலுள்ள ஒரு வகைப் பசைத்தன்மையே இவ்வாறு வழுக்கும் தளத்திலும் இழுத்துச் செல்வதற்கு உதவி புரிந்திருக்கலாம் என்று முதல் கட்ட நிலையில் நம்பிக்கை தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. முயற்சிக்கு எறும்பினை உதாரணமாக நமது முன்னவர்கள் கூறியதில் பொருள் உண்டோ?

# இலவச உடைகளைப் பெற்ற இந்திய வீரர்கள்




கனடாவில் உள்ள இந்தியர்கள் ஒன்றுதிரண்டு தற்போது வன்கூவரில் நடைபெறும், குளிர்கால ஒலிம்பிக் போட்டியில் பங்குபெறும் மூன்று வீரர்களிற்கான சீருடைகளினை வழங்கியுள்ளனர். நடைபெறும் இவ் ஒலிம்பிக் போட்டியில் இந்தியாவின் தேசியக்கொடி பறக்கவேண்டும் என்பதற்கான பங்களிப்பாகவே இதனை கருதுவதாக விளையாட்டுப் பொருட்களின் கடை உரிமையாளர் ஒருவர் கூறியுள்ளார். உறைபனிச் சறுக்கல்வீரர் இருவர், லூாக் வீரரும், அணித்தலைவருமான சிவ கேசவன், தனது பழைய லூாக்கர் கடந்த ஆண்டு நவம்பர்மாதம் உடைந்ததனையடுத்து புதிய லூாக்கரினைப் பெற இந்தியாவிலுள்ள ஐந்து வழக்கறிஞர்கள் இணைந்து 45,000 ரூபாக்களை (9,700 டொலர்) வழங்கியதாக தெரிவித்துள்ளார். பல வருடங்களாக இவ்விளையாட்டில் ஈடுபட்டிருந்தாலும், கடந்த ஆண்டே இந்திய அரசு 20,000 ரூபாய்களை ஊக்குவிப்புப் பணமாகக் கொடுத்ததென்றும் கூறும் 28 வயதுடைய கேசவன், நான்காவது முறையாக குளிர்கால ஒலிம்பிக்கில் பங்குபற்றுவதாகவும், இந்தியாவிற்கு வெளியேயுள்ள இந்தியர்களின் உணர்வை பெரிதும் மதிப்பதாகப் பெருமையுடன் நினைவு கூருகின்றார். உலகின் மிகப்பெரிய பொருளாதார வளம் மிக்க நாடுகளில் ஒன்றான இந்தியா தனது வீரர்களை இவ்வாறு நிர்க்கதியாக விட்டது ஏன் என்ற கேள்விதான் இந்தியர்களின் இன்றைய முதன்மைக் கேள்வியா?

# பிறப்புவிகிதம் குறையும் அச்சத்தில் தாய்வான்

தற்போது பிறந்துள்ள புலி ஆண்டில் பிறப்பு விகிதம் குறையும் என்ற அச்சத்தில் தாய்வான் கலக்கமடைந்துள்ளது. இப்புதிய ஆண்டின் சீன இராசி முறைப்படி மகப்பேறு ஆபத்துக்களைக் கொடுக்கும் என்பதால் அதனைத் தவிர்ப்பதற்கே அநேகர் விரும்புவர். குறிப்பாக பெற்றோரின் அழுத்தம் அதிகம் காணப்படும் நிலையே தென்படுகின்றது. ஆதலால் கவலை தரும் விடயங்களைத் தவிர்ப்பதற்கு அநேக பெற்றோர் திட்டமிட்டுள்ளனர். ஆனால் இதனால் ஏற்படும் பிறப்பு வீழ்ச்சியையிட்டு தாய்வான் அரசு கலக்கம் அடைய ஆரம்பித்துள்ளது. அத்தோடு இவ்வாண்டில் திருமணங்கள் செய்வதனையும் பலர் தவிர்க்கவுள்ளனர். இதற்கு முந்திய புலி வருடமான 1998இல் 2,71,450 மகப்பேறுகள் இடம் பெற்றிருந்தன. இது 1997ம் ஆண்டின் பிறப்புத் தொகையை விட 54,550 குறைவானது.

2,000 ஆண்டில் 3,05,312 ஆக பிறப்பு எண்ணிக்கை அமைந்திருந்தது. இதுவே இவர்கள் எதிர்கொண்ட இறுதி பூத வருடமாகும். இவ்வாண்டில்தான் அதிக செல்வச் செழிப்புடன் இம்மக்கள் காணப்பட்டனர். தாய்வான் உலகிலேயே பிறப்பு விகிதம் குறைந்த நாடுகளில் ஒன்றாக காணப்படுவதோடு கல்வியில் இருந்து சுகாதார வசதிவரை பின்தங்கிய நிலையிலேயே உள்ளது. ஒவ்வொரு 1000 மக்களிற்கும் என்ற அடிப்படையிலேயே பிறப்பு விகிதம் கணிக்கப்படுகின்றது. அதன்படி தாய்வானில் 8.29 ஆகவுள்ள நிலையில், உலகின் சராசரி பிறப்பு 20 விகிதமாகவுள்ளது என ஐக்கிய நாடுகள் சபையின் புள்ளிவிபரம் தெரிவிக்கின்றது. 2009ம் ஆண்டு 191310 குழந்தைகள் பிறந்துள்ளனர். இது 2008ம் ஆண்டைவிட 3.74 விகிதம் குறைவானது.

